DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 302/2020

PROSECUTION WITNESS L.W.13/P.W.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னகாமணன் | தகப்பனார் பெயர் | பெரியகாமன் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | காவல் ஆய்வாளர் | வயது | |

**(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 04.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது வடக்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) வடக்கு காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு.ஜெயரத் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.சிவக்குமார் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு பரீட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 20.03.2020 ம் தேதி, 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.ஜெயரத் நிலைய அலுவலில் இருந்த போது ஜெயசந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று குற்ற எண்.181/2020 சட்டபிரிவு 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை வாதியின் அசல் புகாருடன் இணைத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 க்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு.சிவக்குமார் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) அன்றைய தினமே பகல் 15.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முத்துகுமரன், சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.04 17:00:50 +0530

4) வழக்கு சாட்சிகள் ஜெயசந்திரன், அண்ணாமலை, சங்கர், சிவா, முத்துக்குமரன், சக்திவேல், ஆகிய சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிளை தேடியபோது 22.04.2020 ம் தேதி அதிகாலை வடக்கு காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளில் கண்ட எதிரிகள் மற்றும் களவு சொத்துகளை கண்டுபிடிக்கும் பொருட்டு நிலைய சரகத்தின் ரோந்து அலுவலராக 04.00 மணியளவில் பெருந்துறை ரோடு, மாருதி நகர், வில்லரசம்பட்டி, எல்லபாளையம் ஆகிய பகுதிகளில் ரோந்து அலுவல் செய்து பின் கன்னிராவுத்தர் குளம் குறிஞ்சி பேக்கரி முன்பு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது அங்கு சந்தேகம் அளிக்கும் வகையில் இன்னோவா காரை நிறுத்தாமல் சென்றவர்களை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் பிரபு என்று கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டவரை சாட்சிகள் முருகானந்தம், வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் ஆஜர் செய்த TN 09 BD 5085 என்ற சில்வர் நிறம் உள்ள Toyoto Innova காரை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (TN 09 BD 5085 என்ற சில்வர் நிறம் உள்ள Toyoto Innova காரின் புகைப்படம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் அனுப்பியுள்ளார். **(படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) பின்னிட்டு 1–ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி இவ்வழக்கின் மற்றொரு எதிரியை தேடியபோது 18.06.2020 ம் தேதி குறிஞ்சி பேக்கரி முன்பு நின்றிருந்த நபர் போலீசை கண்டதும் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரிக்க தனது பெயர் நந்தகுமார் என்று கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டவரை சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, கணேசன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இறுதியாக தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவு 379 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.06.04 17:00:57 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்ன தேதி, நேரத்தில் புகார் பெறப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் சான்று ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் வழக்கிற்காக வேண்டி பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதி, நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும், அதன்படி சான்று பொருள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எந்த சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை கைது செய்வதற்கு முன்பாகவே விசாரணைக்கு என்று கூறி எதிரிகளை வீட்டிலிருந்து அழைத்துச் சென்று வெற்றுத் தாளில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.04 17:01:04 +0530

Judicial Magistrate No.I,
Erode.